தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

16.08.2013

**வடதமிழகத்தில் இன்றும் கனமழை பெய்ய வாய்ப்பு**

வட கடலோர தமிழகம் மற்றும் புதுவையில் வெள்ளிக்கிழமை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு ஆந்திரம் மற்றும் தெற்கு ஒடிசா பகுதிகளுக்கு இடையில் வளி மண்டலத்தின் மேல்அடுக்கில் ஏற்பட்ட சுழற்சியின் காரணமாக வட தமிழகம் மற்றும் புதுவையின் பல பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வெள்ளிக்கிழமையும் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தென் தமிழகத்தில் ஆங்காங்கே மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பதிவான மழை அளவு (வியாழக்கிழமை காலை வரையிலான நிலவரம் - மி.மீ.): செம்பரம்பாக்கம், சென்னை - 70, திருவள்ளூர், பூந்தமல்லி - 60, ஸ்ரீபெரும்புதூர், மகாபலிபுரம் - 50, தாம்பரம், காஞ்சிபுரம், பூண்டி, செங்கல்பட்டு, மாதவரம், ஆம்பூர், திண்டிவனம் - 40, கிருஷ்ணகிரி, உத்திரமேரூர், மதுராந்தகம், வேலூர், செங்குன்றம், ஒசூர், நாகப்பட்டினம் - 30, திருப்பத்தூர், சாத்தனூர், ஆரணி, வந்தவாசி, எண்ணூர், செஞ்சி, செய்யாறு, விழுப்புரம், ஊத்தங்கரை, புதுச்சேரி - 20, மரக்காணம், காவேரிப்பாக்கம், ஏற்காடு, கடலூர், திருவண்ணாமலை, வாழப்பாடி, அரூர், வாணியம்பாடி, சேலம், ராமேசுவரம், ஆலங்காயம் - 10.

**தனியார் பால் லிட்டருக்கு ரூ.2 உயர்வு**

நான்கு தனியார் நிறுவனங்களின் பால் விலை வெள்ளிக்கிழமைமுதல் லிட்டருக்கு ரூ.2 உயர்கிறது. இதற்கான அறிவிப்பை பால் முகவர்கள் சங்கத்துக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கடந்த புதன்கிழமை அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

திருமலா, டோட்லா, ஹெரிடேஜ், ஜெர்சி ஆகிய 4 தனியார் பால் நிறுவனங்கள், தங்கள் பால் விலையை உயர்த்தியுள்ளன. பால் கொள்முதல், டீசல், பெட்ரோல் மற்றும் மூலப்பொருள்கள் விலை உயர்வு காரணமாக லிட்டருக்கு ரூ.2 உயர்த்தியுள்ளதாக அந்நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

சென்னையில் நாளொன்றுக்கு சுமார் 27.5 லட்சம் லிட்டர் பால் விற்பனையாகிறது. அவற்றில் தற்போது விலை உயர்த்தியுள்ள பால் நிறுவனங்களின் விற்பனை நாளொன்றுக்கு 10 லிட்டரில் இருந்து 11 லட்சம் வரை உள்ளதாகக் கூறப்படுகிறது. அதில் 60 சதவீதம் பால் வீடுகளுக்கு விற்பனையாகின்றன.

கொழுப்பு நீக்கப்பட்ட பால் லிட்டர் ரூ.30-க்கும், நிலைப்படுத்தப்பட்ட பால் ரூ.34-க்கும், கொழுப்பு நீக்காத பால் ரூ.38-க்கும் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பால் முகவர்கள் கண்டனம்: பால் விலை உயர்வுக்கு முகவர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து தமிழ்நாடு பால் முகவர்கள் சங்கத் தலைவர் பொன்னுசாமி கூறியதாவது:

4 தனியார் நிறுவனங்களின் பால் விலை உயர்ந்தன் விளைவாக பிற நிறுவனங்களின் பால் விலையும் உயர வாய்ப்புள்ளது. முகவர்களுக்கு சேர வேண்டிய நியாயமான கமிஷன் தொகையை உயர்த்தாமல், பால் விலையை உயர்த்தினால் பொதுமக்கள் அதிகம் பாதிப்புக்குள்ளாவர்.

முகவர்களின் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் அளிக்க உள்ளோம். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படாவிடில், காலவரையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட உள்ளோம் என்றார் அவர்.

**ரூ.50,000 கோடியில் நீர்ப்பாசனத் திட்டங்கள்**

கர்நாடகத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.50 ஆயிரம் கோடியில் நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று, அந்த மாநில முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

பெங்களூருவில் வியாழக்கிழமை நடைபெற்ற 67-ஆவது சுதந்திர தின விழாவில் அவர் பேசியது:

தென்னிந்தியாவில் அதிகமாக கர்நாடகத்தில்தான் 23.6 சதம் பேர் வறுமையில் உள்ளனர். இதைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தின் 98.36 லட்சம் பிபிஎல் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ வீதம் மாதம் 30 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்திற்காக நிதிநிலை அறிக்கையில் ரூ.3,800 கோடி ஒதுக்கப்பட்டது. மாதம் 2.78 லட்சம் மெட்ரிக் டன் அரிசி விநியோகிக்கப்படுகிறது. எதிர்க்காலத்தில் நியாயவிலை அங்காடிகள் மூலம் கேழ்வரகு, சோளம், தினை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இலவச பால் வழங்கும் திட்டம்

கர்நாடகம் முழுவதும் 1 முதல் 10-ஆம் வகுப்பு வரை படிக்கும் 1.04 கோடி குழந்தைகளுக்கு வாரத்தில் 3 நாள்களுக்கு தலா 150 மி.லி. பால் வழங்கும் திட்டத்தை தொடங்கியுள்ளோம்.

எதிர்க்காலத்தில் ப்ளெக்சி அல்லது டெட்ரா பாக்கெட்களில் பால் வழங்க திட்டமிட்டுள்ளோம். இதற்காக ரூ.384 கோடி செலவிடப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர், தலித்துக்கள், பழங்குடியினர், சிறுபான்மையினர் பெற்றிருந்த ரூ.1,225.81 கோடி கடனை தள்ளுபடி செய்துள்ளோம். இதன்மூலம், 8 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

பயிர்க் கடன்

கர்நாடகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக வறட்சி நிலவியது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்துள்ளதால், மாநிலம் முழுவதும் உள்ள அணைகள், ஏரிகள், குளங்கள் ஆகியவை நிரம்பியுள்ளன.

இதனால், விவசாயிகள் உழவுப் பணிகளைத் தொடங்கியுள்ளனர். விவசாயத்திற்கு தேவையான விதை, உரம் மற்றும் கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ரூ.2 லட்சம் வரை பயிர்க் கடன் பெறும் விவசாயிகள், வட்டி செலுத்த தேவையில்லை.

வேளாண் விளைப் பொருள்களின் விலையை விவசாயிகளே நிர்ணயிப்பதற்காக வேளாண்மை விலை ஆணையம் தொடங்கப்படவுள்ளது. இந்த ஆணையத்தின் பரிந்துரையின் பேரில், விளைப் பொருள்களுக்கு அரசு விலை நிர்ணயம் செய்யும். இதற்காக ரூ.ஆயிரம் கோடி சுழல் நிதி வைக்கப்படும்.

வேளாண்மை தளவாடங்கள் வாங்கினால், அந்தப் பொருள்களுக்கு 50 சத மானியம் அளிக்கப்படும். இதற்காக ரூ.150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பயிர்க் கடன் தள்ளுபடிக்காக ரூ.1,485 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மின் உற்பத்தி

மாநிலத்தின் வளர்ச்சிக்கு மின் உற்பத்தி அவசியமாகிறது. மாநிலத்தின் மின் தேவையை நிறைவேற்றும் வகையில், 12 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளோம்.

கர்நாடகத்தை குடிசையில்லா மாநிலமாக்க அடுத்த 5 ஆண்டுகளில் அனைத்துக் குடியிருப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

நீர்ப்பாசனத் திட்டங்கள்

கிருஷ்ணா, காவிரி நதிப்படுகைகளில் நிலுவையில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை உடனடியாக செயல்படுத்தப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் 9,25,805 ஹெக்டேர் பரப்பில்

நீர்ப்பாசனம் வழங்குவதற்காக ரூ.50 ஆயிரம் கோடியில் திட்டம் செயல்படுத்தப்படும்.

நிகழ் நிதியாண்டில், 1,08,590 ஹெக்டேர் பரப்பில் நீர்ப்பாசனம் செய்து தரப்படும். இதற்காக ரூ.9,363 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மொழிக் கல்வி

ஒன்றாம் வகுப்பு முதல் தாய் மொழியுடன் ஆங்கிலம் மொழிப் பாடமாக கற்பிக்கப்படும். பின்தங்கிய பகுதிகளில் 15 கல்லூரிகள் தொடங்கப்படும். சாமராஜ்நகர், கொப்பள், கார்வார், குடகு, கதக், குல்பர்காவில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும்.

பிபிஎல் மற்றும் இதர திட்ட வரம்பில் இல்லாதவர்களுக்காக புதிய சுகாதாரக் காப்பீடு திட்டம் தொடங்கப்படும். விரைவில் 3-ஆவது உலக முதலீட்டாளர் மாநாடு நடத்தப்படும். அடுத்தாண்டில், புதிய தொழில் கொள்கை வகுக்கப்படும்.

தகவல் தொழில்நுட்பங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு, வேலைவாய்ப்பை பெருக்குவோம். 2-ஆம், 3-ஆம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடங்க ஊக்கம் அளிக்கப்படும் என்றார் சித்தராமையா.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 118.71 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 11,499 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 118.71 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 11,499 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து நொடிக்கு 12,009 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து நொடிக்கு காவிரியில் 6,001 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 4,501 கன

அடி வீதமும், கல்லணை கால்வாயில் 2,306 கன அடி வீதமும்,

கொள்ளிடத்தில் 521 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 85.16 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 85.16 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,709 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,200 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 18.58 டி.எம்.சி.

**மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி**

அபிராமம் பேரூராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி, வியாழக்கிழமை நடைபெற்றது.

பேரூராட்சித் தலைவர் (பொறுப்பு) எம். மாரி தலைமையில் நடைபெற்ற பேரணியை செயல் அலுவலர் ஆர். ராஜாராம் துவக்கி வைத்தார். பேரணியில் பேரூராட்சி வார்டு கவுன்சிலர்கள், அலுவலக பணியாளர்கள், பேட்டை தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியர் பலரும் பங்கேற்றனர்.

முக்கிய வீதிகள் வழியாக பேரணியினர் மழை நீர் சேகரிப்பு குறித்த கோஷங்களை முழங்கியபடி சென்றனர். சிவகங்கை மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் கோ. தெய்வநாயகம் ஆலோசனையில் பேரணி ஏற்பாடுகளை செயல் அலுவலர் ராஜாராம் உள்ளிட்டோர் கவனித்தனர்.

**விவசாயிகளுக்கு பண்ணைப் பள்ளி பயிற்சி**

உளுந்தூர்பேட்டை வேளாண்மைத்துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் மக்காச்சோளம் பயிரில் உழவர் பண்ணைப்பள்ளி பயிற்சி எறையூரில் புதன்கிழமை நடைபெற்றது.

பயிற்சிக்கு அட்மா திட்டத் தலைவர் கோவிந்தன் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் கருணாநிதி சிறப்புரையாற்றினார். அட்மா திட்டம் குறித்தும், உழவர் பண்ணைப்பள்ளி குறித்தும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் முத்துலட்சுமி விளக்கவுரையாற்றினார்.

விரிவாக்க அலுவலர் பொன்.காமராஜ், வேளாண் துணை அலுவலர் அலெக்சாண்டர் மற்றும் அட்மா திட்ட பொருள் சிறப்பு அறிஞர்கள் சரவணச்செல்வன், மகேந்திரன் பேசினர். பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் அண்ணாதுரை, ராஜாக்கண்ணு செய்திருந்தனர்

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் தேதி மாற்றம்**

விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமைக்கு (ஆகஸ்ட் 16) பதிலாக, வரும் ஆகஸ்ட் 20-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அலுவல் பணி காரணமாக, இக்கூட்டம் நடைபெறும் தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே வரும் ஆகஸ்ட் 20-ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை, 11 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் விவசாய பெருமக்கள் அதிக அளவில் கலந்து கொண்டு தங்களது விவசாயம் தொடர்பான குறைகளை மனுக்களாக வழங்கலாம் என தெரிவித்துள்ளார் ஆட்சியர் லி. சித்ரசேனன்.

**சம்பா பருவத்துக்கான புதிய நெல் ரகங்கள்**

ஆழ்குழாய் வசதியுள்ள விவசாயிகள் மட்டுமே குறுவை சாகுபடி செய்துள்ள நிலையில், தாமத தென்மேற்குப் பருவமழை காரணமாக எதிர்பார்க்காத வேகத்தில் மேட்டூர் அணை நிரம்பி வீராணம் ஏரியும் பாசனத்துக்கு திறந்து விடப்படவுள்ளது.

இந்நிலையில் விவசாயிகள் சம்பா பருவத்துக்கான ரகத்தை தேர்வு செய்வதற்காக புதிய சம்பா நெல் ரகங்கள் குறித்து பரங்கிப்பேட்டை வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ் தெரிவித்தது:

ஐந்து புதிய சம்பா ரகங்களை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த சம்பா ரகங்களை பயிரிட்டு அதிக மகசூல் பெறலாம்.

சம்பா மசூரி: பிபிடி-5204 என்றழைக்கப்படும் இந்த ரகம் சம்பா மசூரி என்ற பெயரில்தான் அறிவிக்கப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டத்தில் சில ஆண்டுகளாக பெரும்பாலான விவசாயிகளால் பயிரிடப்படுகிறது.

135 நாள்கள் வயதுடைய, சாயாத தன்மை கொண்டது. புகையான், குலைநோய் ஆகியவைகளால் எளிதில் பாதிக்கும் தன்மையுள்ளது.

தண்ணீர் அதிகம் தேங்காத மேட்டுப்பாங்கான நிலங்களும் மிகவும் ஏற்றது. கூடுதல் மகசூல் திறன், தனியார் வியாபாரிகளால் விரும்பி வாங்கப்படுகிறது.

அரசின் குறைந்தபட்ச ஆதார விலையைவிட கூடுதல் விலை கிடைப்பது போன்ற காரணங்களால் இந்த ரகம் விவசாயிகளின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

நீர் தேங்கும் பள்ளமான வயல்களில் இந்த ரகத்தை பயிரிடும் விவசாயிகள், பாய்ச்சலும், காய்ச்சலுமாக நீர் பராமரிப்பு, நீர் மறைய நீர் கட்டுதல், தழைச்சத்தை மேலுரமாக மூன்று முறையாக, 22 கிலோ யூரியா வீகம் ஒரு முறைக்குப் பிரித்து இடுதல் போன்ற உழவியல் நுட்பங்களை கடைபிடித்தால் பூச்சிநோய் தாக்குதலைத் தவிர்க்கலாம்.

இளு(த)-50: இந்த ரகம் கோ-43 மற்றும் அஈப-38 ஆகிய ரகங்களை தாயாதிகளாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. 135 நாள்கள் வயதுடையது.

அதிகம் சாயாது, நடுத்தர சன்னரக நெல்மணிகள் கொண்டது. அதிக மகசூல் திறன் கொண்டது. நீண்ட நெற்கதிர்கள், சராசரியாக 300 மணிகள், கதிர்கள் கொண்டது.

இளு(த)-38: இந்த ரகம் கோ-43 மற்றும் அநஈ-19 ஆகிய ரகங்களை தாயாதிகளாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

வெள்ளை பொன்னி ரகம் போன்று உயரம் வளரும், நடுத்தர சன்னரக நெல்மணிகள். மகசூல் திறன் கொண்டது. பள்ளமான தண்ணீர் அதிகம் தேங்கும் வயல்களுக்கு ஏற்ற ரகமாகும்.

சகத 34449: இந்த ரகம் ஆந்திர மாநிலம் நெல்லூர் ஆராய்ச்சி நிலையத்தாரால் வெளியிடப்பட்ட ரகமாகும். 125 நாள்கள் வயதுடையது, சாயாத தன்மை கொண்டது. மிகச்சன்ன ரக நெல்மணிகள்.

ஆடப-5204: கடந்த ஆண்டில் இந்த ரகத்தை பயிர் செய்த விவசாயிகளுக்கு வறட்சியான நிலையில் குறைந்த பாசனத்தில் நல்ல மகசூல் கிடைத்ததால் விவசாயிகளிடையே பரவலாக இந்த ரகம் அறியப்பட்டு வருகிறது.

10 நாள்கள் குறைவான வயது நெல்மணிகள், பிபிடி போன்று நல்ல விலை கிடைக்கும். எனினும் இந்த ரக அரிசியின் ருசி குறைவாக இருக்கும், டெல்டா வட்டாரங்களில் தை முதல் வாரத்தில் பயிறு வரை விதைப்பு, நஞ்சை தரிசாக பயிரிடுவதால் தை முதல் வாரம் அல்லது 2-ஆம் வாரம் அறுவடை வரும் வகையில் விதைப்பு தேதியை நிர்ணயிக்க வேண்டும்.

இவ்வாறு விதைப்பு தேதியை நிர்ணயித்து அதற்கேற்றார்போல் வயதுடைய ரகத்தை தேர்வு செய்யலாம்.

மேலும் நேரிடை விதைப்பு செய்யும்போதும் திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரின் வயது 10 நாள்கள் குறையும். இதையும் கருத்தில் கொண்டு இந்த ரகத்தைத் தேர்வு  செய்யலாம் என்கிறார் வேளாண் உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ்.

**நெல் மாற்று நடவு இயந்திரத்தை வாடகைக்குப் பெறலாம்**

டெல்டா விவசாயிகள், நெல் நாற்று நடவு இயந்திரத்தை வாடகைக்குப் பெற அணுக வேண்டிய கூட்டுறவுச் சங்க ங்களின் எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் பி.ரேணுகாம்பாள் விடுத்துள்ள அறிக்கை:

விவசாயத்தை இயந்திரமயமாக்கி நெல் சாகுபடியில் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கில், டெல்டா விவசாயிகளுக்கு நாற்று நடவு செய்யும் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு விட கூட்டுறவுச் சங்கங்கள் தயாராக உள்ளன.

இந்த இயந்திரங்களை வாடகைக்குப் பெற கீழ்கண்ட எண்களை விவசாயிகள் அணுகலாம்.

சங்கத்தின் பெயர் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய செல்போன் எண்கள் விவரம்:

குமராட்சி - 97513 77826, நந்திமங்கலம் - 94869 18514, புதுச்சத்திரம் - 99768 67547, கிருஷ்ணாபுரம் - 90436 65827, பின்னலூர் - 97501 52535, நாட்டார்மங்கலம் - 99442 25103, சி.ஒரத்தூர் - 75982 21959, சேத்தியாத்தோப்பு - 94864 21480, பு.முட்லூர் - 94427 18771 மற்றும் மோவூர் - 99769 67433.

**22-ல் பயிர் காப்பீட்டு நிவாரணம் கோரி உண்ணாவிரதம்**

பயிர் காப்பீட்டு நிவாரணத்தை விரைவில் வழங்கக் கோரி, வரும் ஆகஸ்ட் 22-ம் தேதி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட விவசாயிகள் சங்கம் முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கடலூர் மாவட்டக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு மாவட்ட தலைவர் கே.மாதவன் தலைமை வகித்தார். சங்கத்தின் மாநிலத் தலைவரும், எம்.எல்.வு.மான கே.பாலகிருஷ்ணன், மாவட்டச் செயலர் ஜி.ஆர்.ரவிச்சந்திரன், பொருளர் தட்சிணாமூர்த்தி உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

தீர்மானங்கள்:

மேட்டூர் அணையில் முழு கொள்ளளவுக்கு நீர்மட்டம் எட்டியதால், காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. முறையாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் திட்டமிடாததால், ஒரே நாளில் 6 டி.எம்.சி., தண்ணீர், கொள்ளிடம் ஆற்றின் வழியாக கடலில் வீணாகக் கலந்துள்ளது. இது கண்டனத்திற்குரியது. இதற்கு காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொள்ளிடம், காவிரி ஆற்றின் கரையோரம் உள்ள ஏரிகள், குளங்கள், பாசன வாய்க்கால்களை உடனடியாக தூர்வார வேண்டும். சிதம்பரம் மற்றும்

காட்டுமன்னார்கோவில் பகுதி விவசாயப் பணிகளுக்கு முன்னுரிமை அளித்து வீராணம் ஏரி நீரை வழங்க வேண்டும்.

கொள்ளிடம் ஆற்று நீரை, கான்சாகிப் கால்வாயில் இணைக்கும் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். தானே புயலால் பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு, அரசு அறிவித்த திட்டங்களை முறையாக அமல்படுத்த வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு நிவாரணத்தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் ஆகஸ்ட் 22-ம் தேதி, சிதம்பரம் சார் ஆட்சியர் அலுவலகம் முன்பு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**தழைச்சத்தை நிலைப்படுத்தும் நுண்ணுயிர் உரங்கள்**



எந்த ஒரு பயிரும் தனக்குத் தேவையான சத்துகளைத் தன்னைச் சுற்றியுள்ள சூழல்களிலிருந்தும், மண்ணிலிருந்தும் தானாகவே கிரகித்துக் கொள்கிறது.

ஆனாலும், சில சாதகமில்லா சூழ்நிலைகளில் பயிருக்குத் தேவையான அளவு ஊட்டச்சத்துகள் மண்ணிலிருந்து கிடைப்பதில் பல்வேறு காரணங்களால் சிக்கலாகிப் போகலாம்.

இந்த நிலையில், ரசாயன உரங்கள், உயிர் உரங்களை மண்ணில் இடுவதன் மூலம் பயிரின் ஊட்டச்சத்து தேவைகளை நிறைவு செய்யலாம்.

மண்ணில் தழைச்சத்தை நிலைப்படுத்தி ரசாயன உரங்களைத் தவிர்த்து அதிக மகசூல் பெற பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து, டாக்டர் பெருமாள் அறிவியல் ஆராய்ச்சி மைய ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தரராஜ் கூறியது: பொதுவாக உயிர் உரங்கள் பெரும்பாலும், தழைச்சத்தையும், மணிச்சத்தையும் அளிக்கவல்லன. காற்றில் இருக்கும் தழைச்சத்தை நிலைநிறுத்தியும், மண்ணில் கரையாமல் இருக்கும் மணிச்சத்தைக் கரைத்தும் கொடுக்கக்கூடிய நுண்ணுயிர்கள் உயிரி உரங்களாக உபயோகப்படுத்தப்படுகின்றன.

உயிர் உரங்களைத் தழைச்சத்தை நிலைப்படுத்தும் உரங்கள், மணிச்சத்தை கரைத்துக் கொடுக்கும் நுண்ணுயிர் உரங்களாகப் பிரித்து வகைப்படுத்தலாம். தழைச்சத்தை நிலைப்படுத்தும் நுண்ணுயிர் உரங்களுக்கு உதாரணமாக ரைசோபியம், அசோஸ்பைரில்லம், அசட்டோபேக்டர் போன்றவற்றையும் கூறலாம்.

ரைசோபியம்: இது ஒரு பாக்டீரியா இனத்தைச் சார்ந்த நுண்ணுயிர் ஆகும். அவரைக் குடும்பத்தைச் சார்ந்த பயிர்களுடன் கூட்டு வாழ்க்கை நடத்தி, பயிர்களின் வேர்களில், வேர் முடிச்சுகளை உண்டாக்குகிறது. ரைசோபியம் நுண்ணுயிர் உபயோகத்தால் தழைச்சத்து உரத்தைச் சேமிப்பதுடன், 20 சதம் அதிக மகசூலையும் தருகிறது. பயிர்களின் வேர்களில் இருந்து கசியும், வேர்க்கசிவுகளும் வேர் முடிச்சுகளில் இருந்து வெளியாகும் வேதிப்பொருள்களும் மண்ணின் வளத்தை மேம்படுத்துகின்றன. பயிர்களின் ரகங்களுக்கு ஏற்ற பயிரிடப்படும் இடத்துக்கு உகந்த ரைசோபிய வகைகளைப் பயன்படுத்த வேண்டும்.

உபயோகப்படுத்தும் முறைகள்: 10 கிலோ விதைகளுக்கு ஒரு பாக்கெட் ரைசோபியம் (200 கிராம்) போதுமானது. 10 கிலோவுக்கு மேல் தேவைப்படும் விதைகளுக்கு, இரண்டு பாக்கெட்கள் ரைசோபியம் போதுமானது.

இலைமக்கு, மண் அல்லது கரித்தூளில் கலக்கப்பட்ட ரைசோபியம் நுண்ணுயிரை ஒரு டம்ளர் (200 மி.லி.) அரிசிக் கஞ்சியில் கலந்து கலவையைத் தயார் செய்ய வேண்டும்.

இந்தக் கலவையில் தேவையான அளவு விதைகளை இட்டு, எல்லா விதைகளிலும் கலவை ஒட்டிக் கொள்ளுமாறு நன்றாகக் கலக்க வேண்டும். கலந்த விதைகளை நிழலில் 30 நிமிஷங்கள் உலர்த்தி உடனடியாக விதைக்கலாம்.

அசோஸ்பைரில்லம்: பாக்டீரியா இனத்தைச் சார்ந்த அசோஸ்பைரில்லம் என்ற நுண்ணுயிரி அனைத்து வகை வேளாண் பயிர்களுக்குப் பயன்படுவதாகும். அசோஸ்பைரில்லம் காற்றில் இருக்கும் தழைச்சத்தை நிலை நிறுத்துவதோடு, பயிர் வளர்ச்சிக்குத் தேவைப்படும் வளர்ச்சி ஊக்கிகளை உற்பத்தி செய்கிறது. இதனால் பயிர்களின் வேர்களும், தண்டுப்பாகமும், இலைகளும் வேகமாக வளர்கின்றன. கதிர்களில் அதிக மணிகள் பிடிப்பதால் 25 சதம் வரை அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பளிக்கிறது.

உபயோகிக்கும் முறை: நேரடியாக விதைக்கும் பயிர்களுக்கும் அசோஸ்பைரில்லத்தை விதையுடனும், மண்ணிலும் இட வேண்டும். நாற்று விட்டு நடும் பயிர்களுக்கு நாற்றுகளின் வேர்களை நனைத்தும், நாற்றங்கால் மற்றும் நடவு வயலிலும், மண்ணிலும் இடவேண்டும்.

விதையுடன் கலத்தல்: இரண்டு பாக்கெட் அசோஸ்பைரில்லம் நுண்ணுயிரை அரிசிக் கஞ்சியுடன் கலந்து கலவை தயார் செய்து, இந்தக் கலவையில் ஏக்கருக்குத் தேவையான விதையை இட்டு, எல்லா விதைகளின் மேல் படியும் வரை நன்றாகக் கலக்க வேண்டும். இவ்வாறு கலந்த விதைகளை நிழலில் 30 நிமிஷங்கள் உலர்த்தி பின்பு விதைக்கலாம்.

நாற்றங்காலில் இடுதல்: ஏக்கருக்குத் தேவையான நாற்றங்கால், 4 பாக்கெட்டுகள் (200 கிராம் பாக்கெட்) அசோஸ்பைரில்லத்தை 10 கிலோ தொழுஉரத்துடன் கலந்து தூவவும்.

நாற்றுகளின் வேர்களை நனைத்தல்: இரண்டு பாக்கெட்கள் அசோஸ்பைரில்லத்தை, 40 லிட்டர் தண்ணீரில் கலக்கி, இந்தக் கரைசலில் நாற்றுகளின் வேர்பாகம் 20 நிமிஷங்கள் நனையும்படி வைத்திருந்து பின்பு நடவு செய்யலாம்.

நடவு வயலில் இடுதல்: 4 பாக்கெட் அசோஸ்பைரில்லத்தை 20 கிலோ தொழுஉரத்துடன் கலந்து நடவு வயலில் விதைப்பதற்கு முன் தூவ வேண்டும்.

வளர்ந்த பயிர்களுக்கு இடுதல்: ஏற்கெனவே வளர்ந்த பயிர்களுக்கும், 20 முதல் 50 கிராம் அசோஸ்பைரில்லத்தை ஒரு கிலோ தொழுஉரத்துடன் கலந்து பயிர்களின் வேர்பாகத்தில் இட்டு மண் அணைக்கலாம்.

அசட்டோபேக்டர்: இது மண்ணில் தனித்து வாழ்ந்து தழைச்சத்தை நிலைப்படுத்தும் நுண்ணுயிராகும். மண்ணின் கனிமப் பொருள்களின் அளவை அதிகரிப்பதன் மூலம் இந்த நுண்ணுயிரின் திறனை மேம்படுத்தலாம். மண்ணில் இந்த வகை பாக்டீரியாக்கள் பாலிசாக்கரைடுகளை அதிக அளவு உற்பத்தி செய்வதால் மண்ணின் கட்டமைப்புத் தன்மை அதிகரிக்கிறது. தழைச்சத்தை நிலைப்படுத்துவதுடன், பயிர் ஊக்கிகளையும் உற்பத்தி செய்து பயிர் வளர்ச்சியை அதிகரிக்கவல்லது. அசட்டோபேக்டரை அனைத்துப் பயிர்களுக்கும் உபயோகப்படுத்தலாம்.

உபயோகிக்கும் முறை: அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் உரத்தை உபயோகிக்கும் முறைகளையே இவற்றுக்கும் பின்பற்றலாம். பிற நுண்ணுயிர் உரங்களுடன் கலந்து இடும்போது, இரண்டு நுண்ணுயிர்களையும் உபயோகிக்கும் தருணத்தில், சம அளவு கலந்து கொண்டு, பின்பு அரிசிக் கஞ்சியுடன் கலக்க வேண்டும்.

இவை அனைத்தும் தழைச்சத்தை நிலைப்படுத்தும் நுண்ணுயிர் உரங்களாகும். இவற்றை பயன்படுத்துவதன் மூலம் பயிரின் மகசூல் அதிகரிப்பதோடு, பயிர்களுக்கு தழைச்சத்தை கொடுக்கக் கூடிய ரசாயன உரங்களின் அளவையும் 20 முதல் 25 சதம் வரை குறைத்துக் கொள்ளலாம்.

**பூச்சி மருந்து தெளிப்பில் ஆலோசனைகள்**



பூச்சி மருந்து தெளிக்கும் விவசாயிகள் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் குறித்து திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் கு. இளஞ்செழியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகள் பயிர்களில் பூச்சிகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மருந்து தெளிப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதனால் நன்மை செய்யும் பூச்சிகள் பாதிக்கப்படுவதுடன் மட்டுமில்லாமல், சுற்றுபுறச் சூழ்நிலையும் பாதிக்கப்படுகிறது. மேலும் அளவுக்கு அதிகமாக மருந்துகளைப் பயன்படுத்துவதால் நாம் உண்ணும் உணவு தானியங்கள் மற்றும் காய்கறிகளில் நச்சுத்தன்மை அதிகமாகி மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே விவசாயிகள் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், தங்களுடைய உடல் நலத்தையும் பாதுகாத்து கொள்ள வேண்டும்.

பூச்சிகளை துளைப்பான்கள், இலையை உண்பவை மற்றும் சாறு உறுஞ்சும் பூச்சிகள் என்று பிரிக்கலாம். இவற்றில் எந்த வகையான பூச்சிகள் தங்களுடைய பயிரை தாக்கியிருக்கின்றன என்பதைத் தெரிந்து, அதற்கேற்றவாறு பரிந்துரைக்கப்பட்ட மருந்தை சரியான அளவு நீருடன் கலந்து கைத்தெளிப்பான் அல்லது விசைத்தெளிப்பான் மூலம் செடிகளில் படும்படி காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும்.

கைத்தெளிப்பானைப் பயன்படுத்தும்போது, ஒரு ஏக்கருக்கு பரிந்துரைக்கப்பட்ட மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். அதுபோல் விசைத்தெளிப்பான் கொண்டு மருந்து தெளிக்கும்போது பரிந்துரைக்கப்பட்ட மருந்தை 60 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு குறைவான அளவு மருந்து தெளிக்கும்போது பூச்சிகள் மருந்துக்கு கட்டுப்படுவதில்லை. அதே நேரத்தில் அதிகமான அளவு மருந்து தெளிக்கும்போது பயிரானது காய்ந்து விடுவதற்கு வாய்ப்பு அதிகம். மேலும் தானியங்களும், காய்கறிகளும் நச்சுத்தன்மையுடன் காணப்படும். எனவே விவசாயிகள் பரிந்துரைக்கப்பட்ட மருந்தை சரியான அளவில் தெளிக்க வேண்டும்.

பூச்சிமருந்தின் திறனை அதிகப்படுத்த மருந்துடன் காதி சோப்பு அல்லது ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 200 மி.லி. என்ற அளவில் மருந்துடன் கலந்து தெளிக்க வேண்டும். காய்கறிகளில் தெளிப்பதற்கு முன்னர் காய்கறிகளைப் பறித்துவிட்டு பின்னர் தெளிக்க வேண்டும்.

மருந்து தெளிக்கும்போது காற்று அடிக்கும் திசையில் தெளிக்க வேண்டும். காற்று அடிக்கும் திசைக்கு எதிர் திசையிலோ அதிக சூரிய வெளிச்சம் உள்ள காலங்களிலோ மருந்து அடிப்பதைத் தவிர்க்க வேண்டும். மருந்து தெளித்த தெளிப்பானை நன்கு கழுவி பின்னர் உலர வைக்க வேண்டும்.

மருந்து தெளித்தபின் கண்டிப்பாக சோப்பு போட்டு குளித்து, துணிகளையும் துவைக்க வேண்டும். உபயோகித்த மருந்துக் குப்பிகளை நசுக்கி மண்ணில் புதைத்துவிட வேண்டும். மீதமுள்ள மருந்து உள்ள கலன்களைப் பாதுகாப்பாக குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் வைக்க வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**16.08.2013**

## 234 ஏக்கர் பரப்பு ரங்கசமுத்திரம் கண்மாய் தரிசு நிலங்கள் வளம்பெறுமா

ஆண்டிபட்டி : குன்னூர் செங்குளம் கண்மாயில் உபரியாக வெளியேறும் நீரை, ரங்கசமுத்திரம் கண்மாய்க்கு கொண்டு வந்து, தரிசாகும் நிலங்களை வளமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ரங்கசமுத்திரம் கண்மாய் 234 ஏக்கர் பரப்பு கொண்டது. இக்கண்மாய்க்கு வருஷநாடு வைகை ஆற்றில் இருந்து ஆத்தங்கரைப்பட்டி வாய்க்கால் வழியாக நீர் வரும்படி கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. திட்டம் துவங்கிய காலத்தில் இருந்து, கால்வாய் நீர் கண்மாய்க்கு வந்து சேரவில்லை.இதனால், கண்மாயை நம்பி இருந்த 500க்கும் மேற்பட்ட பாசன நிலங்கள் நாளுக்கு நாள் தரிசாகி விட்டது.கண்மாயில் நீர் தேங்காததால், இப்பகுதியில் உள்ள பல கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டமும் சரிந்து இறவை பாசன நிலங்களும் பாதிப்படைந்துள்ளது. மழைக்காலங்களில், வருஷநாடு வைகை ஆற்றில் நீர் வரத்து ஏற்படும் போது, குன்னூர் அருகே உள்ள செங்குளம் கண்மாய் சில நாட்களில் நிறைந்து விடும். உபரியாக வெளியேறும் நீர் மீண்டும் வைகை அணைக்கு சென்று விடும். செங்குளத்தில் இருந்து உபரியாக செல்லும் நீரை சில கி.மீ.,தூரம் கொண்டு வந்து ரெங்கசமுத்திரம் கண்மாயில் சேர்க்க வலியுறுத்தி, இப்பகுதி மக்கள் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றனர்.

கடந்த சட்டசபை தேர்தலின் போது, இந்த திட்டத்தை நிறைவேற்றுவதாக தேர்தல் வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் யாரும் கண்டு கொள்ளவில்லை. கண்மாயில் முழு அளவில் நீர் தேங்கினால் ரங்கசமுத்திரம், நாச்சியார்புரம், கோயில்பட்டி, குறும்பபட்டி, முத்தனம்பட்டி ஆகிய கிராமங்களில்

234 ஏக்கர் நிலங்கள் நேரடியாகவும், பல ஏக்கர் நிலங்கள் மறைமுகமாகவும் பாசன வசதி பெறும். இப்பகுதியில் உள்ள 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் சமன் செய்யப்படும். திட்டத்தை நிறைவேற்றினால் வறண்டு தரிசாகி வரும் பல கிராமங்களை காக்கவும், இப்பகுதி விவசாயிகள் பிழைப்பு தேடி வெளியூர் செல்வதை தவிர்க்கவும் முடியும்.

## ஓசூர் உழவர் சந்தையில் காய்கறி ரூ.23 லட்சத்துக்கு விற்பனை

ஓசூர்: ஓசூர் உழவர்சந்தையில் வரலட்சுமி பண்டிகையையொட்டி, நேற்று ஒரே நாளில், 23 லட்சம் ரூபாய்க்கு காய்றிகள் விற்பனையானது.

வரலட்சுமி பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, தொழில், வீடுகளில் செல்வம் கொழிக்க பொதுமக்கள், கோவில்கள், வீடுகளில் வரலட்சுமி பூஜை செய்வர்.

இதையொட்டி, நேற்று ஓசூர் உழவர்சந்தை, மொத்த காய்கறி சந்தை, சில்லறை சந்தைகளில் காய்றிகள், பூக்கள், பழங்கள் விலை "கிடுகிடு'வென உயர்ந்தது. விற்பனையும் பல மடங்கு அதிகரித்தது.

சந்தைக்கு, 113 டன் காய்கறிகள், பூக்கள் விற்பனைக்கு வந்தது. இவை, நேற்று ஒரே நாளில், 23 லட்சத்து, 76 ஆயிரத்து, 850 ரூபாய்க்கு விற்பனையானது. காய்கறிகள் வாங்க நேற்று, 13,500 நுகர்வோர்கள் உழவர் சந்தைக்கு வந்தனர். இன்று, வரலட்சுமி பண்டிகை என்பதால் பூக்கள் விலை கிடுகிடு வென உயர்ந்தது. அதிகப்பட்சமாக கனகாம்பரம் கிலோ, ஆயிரம் ரூபாய்க்கும், முல்லை பூ, 500 ரூபாய்க்கும், சாமந்தி பூ, 185 ரூபாய்க்கும், பட்டன் ரோஸ், 145 ரூபாய்க்கும் விற்பனையானது.

ஒரு முழம் முல்லை பூ, 30 ரூபாய் வரை விற்பனையானது. தக்காளி கிலோ, 5 ரூபாய்க்கு விலை குறைந்தது. தேங்காய், 10 ரூபாய் முதல், 15 ரூபாய் வரை விற்பனையானது. மற்ற காய்கறிகள் சராசரியாக கிலோ, 10 ரூபாய் முதல், 30 வரை விற்பனையானது.

### விவசாயிகள் மகிழ்ச்சி

ஸ்ரீபெரும்புதூர்:தொடர் மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து, வேளாண் பணிகளை துவக்கி உள்ளனர்.

ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில், 58 ஊராட்சிகள் உள்ளன. இங்கு, பிச்சிவாக்கம், எடையார்பாக்கம், மதுரமங்கலம், மேல் மதுரமங்கலம், குணகரம்பாக்கம், காந்தூர், ராமானுஜபுரம், பொடவூர், கீர நல்லூர் ஆகிய கிராமங்களில், விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர்.

ஆடிபட்டத்தில், நெற்பயிரை செய்துள்ளனர். கடந்த இரண்டு நாட்களாக, பெய்து வரும் மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், பல விவசாயிகள், சம்பா சாகுபடிக்கான பணிகளை துவக்கி உள்ளனர்.

### அறுவடை நேரத்தில் தொடர்மழை நெற்பயிர்கள் சேதம்

உத்திரமேரூர்:புள்ளம்பாக்கம் கிராமத்தில், அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த, 30 ஏக்கர் நெற்பயிர்கள் மழையால் சேதமாகி, நீரில் மூழ்கின.

கடந்த சில தினங்களாக, காஞ்சிபுரம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில், விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இதனால், விவசாயிகள் ஒரு புறம் மகிழ்ச்சி அடைந்தாலும், ஒரு சில இடங்களில் இந்த மழை காரணமாக விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்.

உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட, புள்ளம்பாக்கம் கிராமத்தில், கடந்த இரு தினங்களுக்கு முன், சூறாவளி காற்றுடன் பொழிந்த மழையில், அப்பகுதியில் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த, 30 ஏக்கர் நில நெற்பயிர்கள் சாய்ந்து, நீரில் மூழ்கி சேதமாயின.

இதனால், அறுவடை செய்ய வேண்டிய பக்குவத்தில் விளைந்த நெல் மணிகள், முளைத்தும், நிலத்தோடு சிதைந்தும் வீணாகின. ஒரு சில விவசாயிகள், கிடைத்தது வரை லாபம் என, இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் முயற்சியில் இறங்கினர்.

இதுகுறித்து, புள்ளம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், "உழைப்பை மூலதனமாய் செலுத்தியது மட்டும் இல்லாமல் உழவு, நாற்று, நடவு,

மருந்து என, ஆயிரக்கணக்கில் செலவு செய்து பயிர் செய்தோம். அறுவடை நேரத்தில் காற்றுடன் மழை பெய்ததால் நெற்பயிர்கள் சேதமடைந்து நஷ்டம் ஏற்பட்டுள்ளது' என்றார்.

## கூடுதல் விளம்பர வருவாய்ஈட்ட ரயில்வே தவறிவிட்டது:சி.ஏ.ஜி., குற்றச்சாட்டு

புதுடில்லி:ரயில்வேயில் விளம்பரம் செய்வதற்கான உரிமங்களை பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கியதில், இந்திய ரயில்வே மேலும் அதிக வருவாயை ஈட்டியிருக்கலாம் என, மத்திய தலைமை கணக்கு தணிக்கை அலுவலகம் (சி.ஏ.ஜி.,) தெரிவித்து உள்ளது.

அதே சமயம், ரயில்வே வாரியம், கள ஆய்வு மேற்கொள்ளாமல், ரயில்வே வருவாய்இலக்கை, அதிகம் நிர்ணயித் துள்ளதாகவும் சி.ஏ.ஜி., குற்றம் சாட்டியுள்ளது.இதுகுறித்து, இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை:இந்திய ரயில்வே, கடந்த, 2008-12ம் நிதியாண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில், விளம்பர உரிமங்களை வழங்கியதன் மூலம், 864 கோடி ரூபாய்ஈட்டியுள்ளது.

**நிர்ணயிக்கப்பட்ட இலக்கு:**ரயில்கள், ரயில் நிலையங்கள், ரயில் டிக்கெட்டுகள், முன்பதிவு விண்ணப்பங்கள் உள்ளி ட்டவற்றில் விளம்பரம் செய்ய, பல்வேறு நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கிய வகையில், மேற்கண்ட தொகை வசூ லிக்கப்பட்டு உள்ளது.இது, கடந்த, 2010-11ம் நிதிஆண்டிற்கு, நிர்ணயிக்கப்பட்ட வருவாய்இலக்கான,1,000 கோடி ரூபாயை விட, மிகவும் குறைவாகும்.அதாவது, ஐந்து ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட தொகையை விட, ஓராண் டிற்கு நிர்ணயிக்கப்பட்ட வருவாய்இலக்கு அதிகமாக உள்ளது.

ரயில்வே வாரியம், சந்தை நிலவரம், விளம்பர மதிப்பு குறித்து சரிவர கணிக்காமல், ரயில்வே வருவாய்குறித்த மதிப்பீட்டை வெளியிட்டு உள்ளது.மேலும்,மண்டல ரயில்வே நிர்வாகங்களை கலந்தாலோசிக்காமல், வருவாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.அதே சமயம்,மண்டல ரயில்வே நிர்வாகங்களும்,தனியார் நிறுவனங்கள் மூலம், விளம்பரங்கள் மற்றும் ஊடகங்கள்

வாயிலான வருவாய்ஆதாரத்தை மதிப்பீடு செய்யவில்லை.

**அதிக ஆர்வம்:**இத்தகைய செயல்பாடுகளை மேற்கொண்டிருந்தால்,இந்திய ரயில்வே, விளம்பர உரிமங்களை வழங்கியதன் மூலம், கூடுதல் வருவாய் ஈட்டியிருக்கலாம். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந் திய ரயில்வே,65 ஆயிரம் கி.மீ.,தூரம்,பயணிகள் மற்றும் சரக்கு ரயில் போக்குவரத்தை மேற்கொண்டு வருகி றது. நாள்தோறும், 19,710 ரயில்கள், பல்வேறு மார்க்கத்தில் இயக்கப்படுகின்றன. இவற்றில், 2.30 கோடி பேர் பயணிக் கின்றனர்.

ரயில்வேயில் விளம்பரம் செய்யப்படும் ஒரு பொருள், குறிப்பிட்ட மண்டலங்கள் மட்டுமின்றி, நாடு முழுவதும் பரவலாக மக்களை சென்றடைகிறது.இதனால், ஏராளமான நிறுவனங்கள், ரயில்வேயில் விளம்பரம் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றன.கடந்த, 2007-08ம் நிதியாண்டில், விளம்பர உரிமங்களை வழங்கியதன் மூலம், இந்திய ரயில் வே, 153.24 கோடி ரூபாய்ஈட்டி உள்ளது. இது, 2008-09ம் நிதிஆண்டில், 157.48 கோடி ரூபாயாகவும்,2009- 10ம் நிதியாண்டில், 170 கோடி ரூபாயாகவும் உயர்ந்து உள்ளது.

2010-11ம் நிதியாண்டில், விளம்பர வருவாய்மூலம்,1,000 கோடி ரூபாய்திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 187.70 கோடி ரூபாய்மட்டுமே திரட்டப்பட்டது.இந்த மிகப் பெரிய வித்தியாசத்தை தான், சி.ஏ.ஜி., ”ட்டிக் காட்டி, ரயில்வே வாரியம், முறையாக ஆய்வு செய்யாமல், வருவாய்இலக்கு நிர்ணயித்து உள்ளதாக தெரிவித்து உள்ளது.கடந்த, 2011-12ம் நிதியாண்டில், இந்திய ரயில்வே, விளம்பர உரிமம் மூலம், 195.14 கோடி ரூபாய் ஈட்டி யுள்ளது.கடந்த, 2009-12ம் நிதியாண்டுகளில், ராஜதானி எக்ஸ்பிரஸ், சதாப்தி, மெயில் மற்றும் எக்ஸ்பிரஸ் உள் ளிட்ட, 74 ரயில்களில் விளம்பரம் செய்ய உரிமம் வழங்கிய வகையில், ரயில்வேக்கு, 24.49 கோடி ரூபாய் மட்டுமே கிடைத்துள்ளது.

**டிக்கெட்:**இதே காலத்தில், 112 புறநகர் ரயில்களில் செய்யப்பட்ட விளம்பரம் மூலம், 11.62 கோடி ரூபாய்கிடைத்து உள்ளது.ரயில்வே விளம்பர வருவாயில்,

ரயில் நிலையங்களின் பங்களிப்பு, 85 சதவீதமாக உள்ளது. இது, ரயில்களில், 11 சதவீதமாகவும், டிக்கெட்டுகள், பயணியர் அட்டவணை மற்றும் ரயில்வே கடவுப் பாதை ஆகிய வற்றில், 4 சதவீதம் என்ற அளவிலும் உள்ளது.

### தாவர எண்ணெய்இறக்குமதி 8.89 லட்சம் டன்னாக எகிறியது

மும்பை:நாட்டின் தாவர எண்ணெய்இறக்குமதி, சென்ற ஜூலை மாதத்தில், 8,89,493 டன்னாக அதிகரித்து உள்ளது. இது, கடந்த ஆண்டு இதே மாதத்தில், 8,70,328 டன்னாக இருந்தது.

சென்ற ஜூன் மாதத்தில், தாவர எண்ணெய்இறக்குமதி, மிகவும் அதிகபட்ச அளவாக, 21 சதவீதம் அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில், சென்ற ஜூலையில், இதன் இறக்குமதி, 2.2 சதவீதம் அளவிற்கே உயர்ந்துள்ளது. இருப்பினும், நடப்பாண்டில், இதன் இறக்குமதி, 1.08 - 1.10 கோடி டன் என்ற அளவில் இருக்கும் என, மதிப்பிடப் பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டில், 98.80 லட்சம் டன்னாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு 2012-13ம் எண்ணெய்பருவத்தின் (நவ.,-அக்.,), முதல் ஒன்பது மாதங்களில், நாட்டின் ஒட்டு மொத்த தாவர எண்ணெய்இறக்குமதி, 10.58 சதவீதம் அதிகரித்து, 80.30 லட்சம் டன்னாக உயர்ந்து உள்ளது. இது, கடந்த எண் ணெய்பருவத்தில், 72.60 லட்சம் டன்னாக இருந்தது.

கச்சா மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் உட்பட, நாட்டின் ஒட்டு மொத்த தாவர எண்ணெய்இறக்குமதி, நடப் பாண்டில், 1 கோடி டன்னை தாண்டி, புதிய சாதனை படைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.நடப்பாண்டு கரீப் பருவத்தில், ஆகஸ்ட் 2ம் தேதி வரையிலுமான காலத்தில், எண்ணெய்வித்துக்கள் சாகுபடி பரப்பளவு,1.73 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, கடந்தாண்டு கரீப் பருவத்தில்,1.45 கோடி ஹெக்டேராக இருந்தது. உள்நாட்டில், இதன் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என, மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**16.08.2013**

**மேட்டூர் தண்ணீர் கிடைக்கல ஆடிப்பட்டம் கைவிட்டு போச்சு**



சேதுபாவாசத்திரம் : வாய்க்கால்களில் இன்னும் தண்ணீர் வராததால், தஞ்சை மாவட்ட கடைமடை பகுதிகளில் ஆடிப்பட்டம் கைவிட்டு போய்விட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்காக மேட்டூரில் இருந்து கடந்த 2ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் கல்லணை வந்தடைந்ததை தொடர்ந்து, அங்கிருந்து கடந்த 4ம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இதற்கிடையில் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால், கடந்த 5, 6 தேதிகளில் கொள்ளிடத்தில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான கன அடி நீர் திறக்கப்பட்டு, அந்த தண்ணீர் கடலில் வீணாக கலந்தது. ஆனாலும் இன்னும் தஞ்சை மாவட்டத்தின் கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் வந்து சேரவில்லை.

குறிப்பாக சேதுபாவாசத்திரம் அருகில் உள்ள புதுப்பட்டினம் நம்பர் 5, 6 வாய்க்கால்கள் வறண்டு கிடக்கின்றன. கடந்தாண்டு மேட்டூர் அணையில் இருந்து போதிய தண்ணீர் வராததாலும், பருவமழை பொய்த்ததாலும் கடைமடை

விவசாயிகள் சாகுபடி இன்றி இருந்த நிலையில் இந்தாண்டு மேட்டூர் அணை முழுமையாக நிரம்பி திறக்கப்பட்டது. நேரடி விதைப்பை கைவிட்டு ஒருபோக சம்பா சாகுபடிக்கு ஆடிப்பட்டத்தில் நாற்றுவிடுவதற்கு விவசாயிகள் ஆவலுடன் இருந்தனர்.

பொதுவாக ஆடிப்பட்டத்தில் விதைப்பது நல்ல மகசூலை தரும். வாய்க்காலில் தண்ணீர் வராததால் ஆடி மாதம் இன்றுடன் நிறைவடையும் நிலையில் ஆடிப்பட்டம் கைவிட்டு போய் விட்டதாக விவசாயிகள் கவலையில் உள்ளனர். இனி குறுகிய கால அல்லது மத்திய கால ரக விதைகளை தான் பயன்படுத்த வேண்டிய நிலையில் இருப்பதாக விவசாயிகள் கூறினர்.

இதுகுறித்து கடைமடை விவசாயி கலிபுல்லா கூறுகையில், திய தண்ணீர் கிடைத்தால்தான் ஒருபோகம் நீண்ட கால ரகமான சி.ஆர் 1009 போன்ற ரகங்களை சாகுபடி செய்ய முடியும். எனவே கலெக்டர் உடனடியாக கடைமடை பகுதிக்கு நாற்றுவிட தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றார்.

**தர்மபுரி தென்னை நார் கயிறு சீனாவுக்கு ஏற்றுமதி**



தர்மபுரி : தர்மபுரி அருகே தேங்காய் மட்டையிலிருந்து தயாரிக்கப்படும் நார் கயிறு மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் சீனாவிற்கு அதிகளவில் ஏற்றுமதியாகிறது.

தமிழகத்தில் தேங்காய் நார் கயிறு தயாரிப்பில் பொள்ளாட்சி முதலிடத்தில் உள்ளது. திண்டுக்கல், திருநெல்வேலி, பட்டுக்கோட்டை, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் அதிகளவில் தேங்காய் நார் கயிறு தயாரிக்கப்படுகிறது. இதில், தர்மபுரி மாவட்டம் 4வது இடத்தில் உள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் காரிமங்கலம் டவுன், அனுமந்தபுரம், கெரகோடஅள்ளி, கள்ளம்பட்டி, மண்ணாடிப்பட்டி, பாளையம்புதூர்,

**பாகிஸ்தானிலிருந்து வெங்காயம் வாங்க இந்திய அரசு திடீர் முடிவு**



புதுடெல்லி: ஜம்மு காஷ்மீர் பகுதியில் எல்லையில் உள்ள இந்திய ராணுவ நிலைகள் மீது பாகிஸ்தான் ராணுவம் கடந்த சில நாட்களாக தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த வாரம் பாகிஸ்தான் ராணுவத்தின் சிறப்பு படையினர் இந்திய எல்லைக்குள் புகுந்து இந்திய வீரர்கள் 5 பேரை சுட்டுக் கொன்றனர். இதை தொடர்ந்து எல்லையில் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. பாகிஸ்தான் அத்துமீறலை கண்டித்து நேற்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தியாவின் பொறுமையை சோதிக்க வேண்டாம் என குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி தனது சுதந்திர தின உரையில் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள வெங்காய தட்டுப்பாட்டை சமாளிக்க பாகிஸ்தானிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய இந்திய அரசு முடிவு செய்துள்ளது. நாடு முழுவதும் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக வெங்காய விலை கிடு கிடுவென உயர்ந்து வருகிறது. டெல்லியில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.80க்கு விற்கப்படுகிறது. விலை ரூ.100 வரை உயரும் என அஞ்சப்படுகிறது.

இதை சமாளிக்க கிலோ ரூ.65க்கு குறைவாக வெளிநாடுகளுக்கு வெங்காயம்

ஏற்றுமதி செய்யக்கூடாது என வியாபாரிகளுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மேலும் வெளிநாடுகளிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. பாகிஸ்தான், சீனா, ஈரான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் வெங்காயம் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. விலையும் மிக குறைவாக உள்ளது.

எனவே இந்த நாடுகளிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. டெலல்லியில் வர்த்தகம் மற்றும் வெளியுறவு அமைச்சக உயர் அதிகாரிகள் மட்டத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

16.08.2013

**சேமிப்பு கிடங்கில் இருந்து உற்பத்தியாகும் பூச்சிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை கலெக்டர் கருணாகரன் தகவல்**

கோவை பீளமேட்டில் உள்ள இந்திய உணவுக்கழக சேமிப்பு கிடங்கில் இருந்து உற்பத்தியாகும் பூச்சிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் கருணாகரன் கூறினார்.கோவை மாவட்ட கலெக்டர் கருணாகரன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது கூறியதாவது:–

தானிய சேமிப்பு கிடங்கு

கோவை பீளமேட்டில் இந்திய உணவு கழகத்துக்கு சொந்தமான, தானிய சேமிப்பு கிடங்கு உள்ளது. இதில் 80ஆயிரம் டன் வரை தானியங்கள் சேமிக்கப்படுகிறது. இங்கு ஆட்கள் பற்றாக்குறை காரணமாக பராமரிப்பு குறைவாக உள்ளது. இதன் காரணமாக அந்த பகுதியில் உள்ள குடியிருப்புகளில் பூச்சிகள், வண்டுகள் தொந்தரவு உள்ளதாக கூறப்படுகிறது. இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கப்பட்டு வருகிறது.

ஊழியர்கள் பற்றாக்குறை

முதல் கட்டமாக அந்த பூச்சிகளை கட்டுப்படுத்தவும், அழிக்கவும், பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கும் பணிநடந்து வருகிறது. இதற்காக வேளாண்மை பல்கலைக்கழகம் மூலமும், பூச்சி மருந்துகள் பெறப்பட்டுள்ளது. அங்குள்ள ஊழியர்கள் பற்றாக்குறையாக உள்ளதால், இந்த பணியில் மாநகராட்சி ஊழியர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளனர். விரைவில் நிரந்தரமாக அந்த பகுதியில் பூச்சி தொந்தரவு பிரச்சினை கட்டுக்குள் கொண்டு வரப்படும்.

வெள்ளலூர் குப்பை கிடங்கு

மேலும் வெள்ளலூர் குப்பை கிடங்கு பிரச்சினை குறித்து மாநகராட்சியுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

**இன்று ஆடி வெள்ளி எதிரொலி: வேலூரில் பூ விலை ‘கிடுகிடு’ உயர்வு**

இன்று ஆடி வெள்ளி என்பதால் வேலூரில் அனைத்து வகையான பூக்களும் திடீரென்று 2 மடங்கு விலை உயர்ந்துள்ளது.

திடீர் விலை உயர்வு 

வழக்கமாக முகூர்த்தம் நடைபெறும் மாதங்களில்தான் பூ விலை அதிக விலைக்கு விற்கப்படும். ஆனால் இது முகூர்த்த மாதம் அல்ல.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு வரை அனைத்து வகையான பூக்களின் விலையும் மிகவும் குறைவாகவே இருந்தது. இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக வேலூர் மார்க்கெட்டில் அனைத்து வகையான பூக்களின் விலையும் 2 மடங்கிற்கு மேல் அதிகரித்துள்ளது.

வேலூர் மார்க்கெட்டில் நேற்று விற்ற 1 கிலோ பூவின் விலையும், கடந்த வாரம் விற்ற 1 கிலோ பூவின் விலையும் (அடைப்புக்குறிக்குள்) வருமாறு:-

சாமந்தி-ரூ.100-150 (ரூ.60), முல்லை-ரூ.300-350 (ரூ.200). மல்லி-ரூ.400 (ரூ.250), கனகாம்பரம்-ரூ.500(ரூ.300), பெங்களூர் பல வண்ண ரோஜா- ரூ.250 (ரூ.100), நட்சத்திர ரோஜா ரூ.250 (100).

அதே சமயம் அனைத்து பூக்களும் ஒரு முழம் ரூ.20-க்கும், கனகாம்பரம் ஒரு முழம் ரூ.30-க்கும் விற்பனையாகிறது. தலையிலும் வைக்கக் கூடிய மேற்கண்ட பூக்களின் விலை உயர்வால் பெண்கள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்த திடீர் விலை ஏற்றத்திற்கு காரணம் என்ன? என்று வேலூர் பூ மார்க்கெட் வியாபாரிகளிடம் கேட்டபோது அவர்கள் கூறியதாவது:-

விசேஷ நாட்கள்

நாளை (இன்று) ஆடி வெள்ளி, வரலட்சுமி விரத நாளும் ஆகும் என்பதால் அனைவரும் தங்கள் வீடுகளுக்கும், கோவில்களுக்கும் பூ வாங்கிச்செல்வார்கள் என்பதால் அனைத்து ஊர்களிலும் பூ விற்பனை அதிகமாகி விட்டது, எனவே வேலூருக்கு பூ வரத்து குறைத்துவிட்டது.

மேலும், ஆந்திராவில் நடைபெறும் போராட்டம் காரணமாக அங்கிருந்து பூக்களின் வரத்து அடியோடு நின்று விட்டது. இவைதான் பூ விலை உயர்வுக்கு காரணம் ஆகும். 2 நாட்கள் கழித்து பூக்களின் விலை மீண்டும் குறைந்து விடும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்.

**மழையால் வர்த்தக வாய்ப்பு டிராக்டர் விற்பனை 23 சதவீதம் உயர்வு**

நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவமழை முன்கூட்டியே தொடங்கி, நாடு முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இதனால் வேளாண் நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், ஏப்ரல்–ஜூலை மாத காலத்தில் டிராக்டர் விற்பனை 23 சதவீதம் அதிகரித்துள்ளது.

நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அனைத்து நிறுவனங்களின் டிராக்டர் விற்பனையிலும் அமோக வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இச்சந்தையில் முதலிடத்தில் உள்ள மகிந்திரா அண்டு மகிந்திராவின் விற்பனை 25 சதவீதம் உயர்ந்து 88,770 டிராக்டர்களாக உள்ளது.

மகிந்திரா நிறுவனம் நடப்பு நிதி ஆண்டில் தனது டிராக்டர் விற்பனை 6 முதல் 8 சதவீதம் வரை வளர்ச்சி காணும் என மதிப்பீடு செய்திருந்தது. பருவமழை

நிலவரங்கள் சாதகமாக உள்ள நிலையில் இந்நிறுவனம் தனது பழைய மதிப்பீட்டை உயர்த்துவதற்கான வாய்ப்புகள் தோன்றியுள்ளன. மற்ற நிறுவனங்களும் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளன.

இந்த நிதி ஆண்டில் தொடக்கம் முதலே டிராக்டர் விற்பனை அமோக வளர்ச்சி கண்டு வருகிறது. ஏப்ரல் மாதத்தில் விற்பனை 31.44 சதவீதம் உயர்ந்து 59,297 டிராக்டர்களாக இருந்தது. மே மாதத்தில் விற்பனை 21.52 சதவீதம் வளர்ச்சி கண்டு 59,738–ஆக உயர்ந்தது. ஜூன் மாதத்தில் 17.48 சதவீதம் உயர்ந்து 67,923–ஆக அதிகரித்துள்ளது.

முதல் காலாண்டில் (ஏப்ரல்–ஜூன்) மொத்தம் 1.87 லட்சம் டிராக்டர்கள் விற்பனையாகியுள்ளன. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 1.52 லட்சமாக இருந்தது. கடந்த நிதி ஆண்டில் டிராக்டர் விற்பனை 2 சதவீதம் சரிவடைந்திருந்தது.